**CC.No.**126/2025

**Date**: 13.05.2026

**ம.சா. 1. பாண்டியராஜன், த/பெ. ஜெயராமன், 39/2026, காரைக்குடி,**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை</u>

1) எதிரி எனக்கு உறவினரா என்றால்இல்லை. எதிரி என் வீட்டிற்கு அருகில் வசிக்கிறாரா என்றால் இல்லை. எதிரி பள்ளி அல்லது கல்லூரியில் என்னுடன் படித்தாரா என்றால் இல்லை. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் மற்றும் வாகனம் வாங்கி விற்பனை தொழில் செய்கிறேன். வருமானவரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எதிரி எவ்வாறு எனக்கு அறிமுகம் ஆனார் என்பதை பற்றி புகார், பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிரியை தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன். எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்பதை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு பணம் ரொக்கமாக கொடுக்கப்பட்டதா அல்லது வங்கி மூலமாக கொடுக்கப்பட்டதா என்பதை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, ரொக்கமாக கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகை கொடுக்கும்போது எந்த நபர்கள் இருந்தார்கள் என்பதை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, பணம் கொடுக்கும்போது நான் மட்டும்தான் இருந்தேன்.

**குறுக்கு விசாரணை –** தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.13 15:12:59 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.